**மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்**
**2012 நவம்பர் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

**நிகழ்ச்சி நிரல்**

I. **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

II. **அறிக்கைகளையும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

01. **கௌரவ உதேன விஜேரத்ன உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மற்றும் மின்சக்தி, மின்வலு, வியாபார நடவடிக்கை அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/v(01) / 12 / 24)**

(அ) மீரிகம பண்டாரநாயக மகா வித்தியாலயம், மீரிகம, மாதிரி கனிஷ்ட வித்தியாலயம், பசியால ஆரம்ப வித்தியாலயம், பல்லேவல மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போது பல்வேறுபட்ட முறைகேடுகள் இடம் பெறுகின்றன என்பதனை அறிவீர்களா ?

(ஆ) காணப்படும் முறைக்கு இணங்க ஆட்சேர்க்கும் போது நேர்முகப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெறும் 33 பிள்ளைகள், மேன்முறையீடுகளின் மூலம் இரண்டு பிள்ளைகள், மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் 07 பிள்ளைகள் என்ற ரீதியில் 42 பேர் சேர்க்கப்படுகின்றார்கள் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

(இ) வகுப்பு ஒன்றில் 45 பிள்ளைகள் வரை சேர்க்கும் போது மிகுதி மூன்று பேர் மற்றும் ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளில் குறைவு ஏற்பட்டால் அவ் எண்ணிக்கை உள்ளடங்குமாறு நேர்முகப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றதன் அடிப்படையின் கீழா ? அல்லது வேறு முறையொன்றின் ஊடாகவா சேர்க்கப்படுகின்றனர் ?

(ஈ) ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது என்ற அடிப்படைக்கு முரணாக செயற்பட்டால், அதனால் பிள்ளைகளுக்கு அநீதி ஒன்று ஏற்படுகின்றது என்பதனை நீங்கள் நம்புகின்றீர்களா ?

(உ) இவ்வாறான அநீதியினைத் தவிர்க்க நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

(ஊ) மேலே கூறப்பட்ட பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டிற்கு சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பிள்ளைகளின் பெயர்ப் பட்டியல் ஒன்றை அவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மற்றும் ஆட்சேர்க்க அடிப்படையாகக் கொண்ட புள்ளிகளைச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

**02. கௌரவ யூ.ஜோர்ஜ் பெரேரா – எதிர்க்கட்சியின் பிரதான ஏற்பாட்டாளரினால் கௌரவ போக்குவரத்து, விளையாட்டு, மற்றும் இளைஞர் விவகாரம், கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், மற்றும் பகிர்ந்தளித்தல், கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/v(01) / 12/25)**

(அ) கம்பஹா மாவட்டத்தின் மாகாண சபை கூட்டுறவு அமைச்சின் கீழ் காணப்படும் சணச சங்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அச் சங்கங்களை பெயரின் அடிப்படையில் வெவ்வேறாக குறிப்பிட முடியுமா ?

(ஆ) அச் சங்கங்களின் பதவிகளுக்கு நியமிக்க எவருக்கு அதிகாரம் உண்டு?

(இ) சணச சங்கங்களில் மகர தொகுதியில் வேபட வடக்கு, மேற்குச் சணச அபிவிருத்தி வங்கிகளின் ஆரம்பச் சொத்தின் அளவு எவ்வளவு என குறிப்பிட முடியுமா ? அச் சொத்துக்கள் தொடர்பாக கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதா ? அது எவ் வருடத்தில் ?

(ஈ) அந்த நிதியை வைப்பிலிட்டவர்களுக்கு வைப்பிற்காக ஒழுங்கான பாதுகாப்பு காணப்படுகின்றதா?

(உ) நிதியை மீண்டும் பெற்றுக் கொள்ள வைப்பாளர்கள் விண்ணப்பிக்கும் போது நிதியைப் பெற பல நாட்கள் எடுக்கின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா?

(ஊ) இது தொடர்பாக விசாரணை ஒன்றினை விரைவாக மேற்கொண்டு இக் கஷ்டத்தை தவிர்க்க நடவடிக்கை எடுப்பீர்களா ?

(எ) இதற்கான பதிலை சபைக்கு சமர்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

**03. கௌரவ அஜந்த நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ போக்குவரத்து, விளையாட்டு, மற்றும் இளைஞர் விவகாரம், கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், மற்றும் பகிர்ந்தளித்தல், கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/v(01) / 12/26)**

(அ) ம/ப பிலியன்தல போக்குந்தர கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபையின் காலம் 2010.05.21 ஆம் திகதி நிறைவடைந்ததுடன், சென்ற இரு வருடத்தினுள் தேர்தலை நடாத்த ஆணையாளருக்கு முடியாமல் போய் உள்ளபடியால் அது தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

(ஆ) நியதிச்சட்டத்தின் 60 ஆவது பிரிவின் 35 "அ" இற்கு இணங்க பணிப்பாளர் சபைக்கு அரச உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டியதுடன், தற்போது ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ள முன்னை நாள் தவிசாளர் நந்தலால் ஜயசுந்தர மற்றும் திரு ஏ.ஏ.டீ. சுணில் ஆகியோர்கள் வகித்த அரச பதவி என்ன ? கால எல்லை யாது ?

(இ) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பணிப்பாளர்கள் நகரத்தின் வியாபாரிகள் ஆகுவதுடன் அவர்கள் நியமிக்கப்பட்டது சட்டத்துக்கு முரணானது என்பதனை நீங்கள் அறிவீர்களா? அப்படியாயின் அவ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

(ஈ) இக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கௌரவ அமைச்சர் காமினி லொகுகே அவர்களும், மாகாண சபையின் முதலமைச்சரும் இது தொடர்பாக விசாரணை நடாத்துமாறு அறிவித்துள்ளதுடன், அது தொடர்பாக எடுத்த நடவடிக்கை யாது ?

(உ) உங்களினால் திறமையுள்ள அரச உத்தியோகத்தர்கள் இருவர் நியமிக்கப்பட்ட பின் மீண்டும் எப்போது தேர்தலை நடத்துவீர்கள் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புகளும் / அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. அனுதாபப் பிரேரணை

**01. முன்னை நாள் கௌரவ மாகாண சபை உறுப்பினர் கே.ஏ. பிரேம திஸ்ஸ பெரேரா அவர்களின் மறைவுக்காக அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை :**

“மேல் மாகாண மாகாண சபையின் இரண்டாவது மாகாண சபைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியை அங்கத்துவப்படுத்தி கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் கௌரவ அங்கத்தவர் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு சுமார் (04) நான்கு வருட காலம் மேல் மாகாண மாகாண சபைக்கும் மேல் மாகாண மக்களுக்கும் அளப்பரிய சேவை ஆற்றிய முன்னை நாள் மாகாண சபை உறுப்பினர் கே.ஏ. பிரேம திஸ்ஸ பெரேரா அவர்கள் அண்மையில் காலமானார்.

மேல் மாகாண மாகாண சபை அவரினால் ஆற்றப்பட்ட சேவையை மெச்சுவதுடன், அவரது மறைவு தொடர்பாக தனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றது .”
[சமர்ப்பிப்பவர் கௌரவ சபாநாயகர்]

**02. முன்னை நாள் கௌரவ மாகாண சபை உறுப்பினர் டப்ளிவ்.கே.விஜயசிறி அவர்களின் மறைவுக்காக அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை :**

“மேல் மாகாண சபையின் முதலாவது மாகாண சபையினை ஐக்கிய சமாஜவாதி முன்னணியையும் இரண்டாவது மற்றும் மூன்றாவது மாகாண சபைகளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியையும் அங்கத்துவப்படுத்தி களுத்துறை நிர்வாக மாவட்டத்தின் உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு (12) வருட காலம் மேல் மாகாண மாகாண சபைக்கும் மற்றும் மேல் மாகாண மக்களுக்கும் அளப்பரிய சேவை ஆற்றிய முன்னை நாள் மாகாண சபை கௌரவ உறுப்பினர் டப்ளிவ்.கே.விஜயசிறி அவர்கள் அண்மையில் காலமானார்.

மேல் மாகாண மாகாண சபை அவரினால் ஆற்றப்பட்ட சேவையை மெச்சுவதுடன் அவரது மறைவு தொடர்பாக தனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றது ." [சமர்ப்பிப்பவர் கௌரவ சபாநாயகர்]

## X. பொது நடவடிக்கை

01. **கௌரவ முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மற்றும் மின்சக்தி, மின்வலு, வியாபார நடவடிக்கை அமைச்சர் (மே.மா.)**

**மேல் மாகாணத்தின் பிரதேச சபை**
**தலைவர், உப தலைவர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு**
**செயற்குழுக் கூட்டத்திற்கு சமூகமளித்ததற்கான கொடுப்பனவு தொடர்பான சட்ட விதி**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சொல்லப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 184(1) உப பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மற்றும் மின்சக்தி, மின்வலு, வியாபார நடவடிக்கை அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1769/4 ஆம் இலக்க 2012.07.30 ஆம் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பிரதேச சபைத் தலைவர், உப தலைவர் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு செயற்குழுக் கூட்டத்திற்கு சமூகமளித்ததற்கான கொடுப்பனவு தொடர்பான சட்ட விதிகளை மேலே கூறப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சொல்லப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 184 (2) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அனுமதிக்காக இந்த மேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

02. **கௌரவ முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மற்றும் மின்சக்தி, மின்வலு, வியாபார நடவடிக்கை அமைச்சர் (மே.மா.)**

**மேல் மாகாணத்தின் நகர சபை**
**தலைவர், உப தலைவர் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு**
**செயற்குழுக் கூட்டத்திற்கு சமூகமளித்ததற்கான கொடுப்பனவு தொடர்பான சட்ட விதி**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சொல்லப்பட வேண்டிய 255 ஆம் அத்தியாயமாகிய நகர சபை கட்டளைச் சட்டத்தின் 193(1) (உஉ) உப பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மற்றும் மின்சக்தி, மின்வலு, வியாபார நடவடிக்கை

அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1769/4 ஆம் இலக்க 2012.07.30 ஆம் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள நகர சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு செயற்குழுக் கூட்டத்திற்கு சமூகமளித்ததற்கான கொடுப்பனவு தொடர்பான சட்ட விதிகளை மேலே கூறப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சொல்லப்பட வேண்டிய 255 அத்தியாயமாகிய நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 194 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க அனுமதிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த மேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

03. **கௌரவ முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மற்றும் மின்சக்தி, மின்வலு, வியாபார நடவடிக்கை அமைச்சர் (மே.மா.)**

**மேல் மாகாணத்தின் மாநகர சபை**
**தலைவர், உப தலைவர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு**
**<u>நிலையான குழுவுக்கு சமூகம் அழித்தல் தொடர்பான கட்டளை</u>**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சொல்லப்பட வேண்டிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 289 ஆவது பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர், நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மற்றும் மின்சக்தி, மின்வலு, வியாபார நடவடிக்கை அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1769/4 ஆம் இலக்க 2012.07.30 ஆம் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாநகர சபையின் தலைவர், உப தலைவர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு நிலையான குழுவிற்கு சமூகமளித்ததற்கான கொடுப்பனவு தொடர்பான கட்டளைகளை மேலே கூறப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சொல்லப்பட வேண்டிய மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 289 ஆவது பிரிவிலும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க அனுமதிக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

## XI. சபை ஒத்திவைப்பு பிரேரணை

கே.எச்.டி.கே. சமரகோன்
செயலாளர்,
மேல்மாகாண மாகாண சபை

2012.10.24 ஆந்» திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.